**செய்தி வெளியீடு எண் : 1877** **நாள் : 27.10.2022**

**செய்தி வெளியீடு**

விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நிதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை உடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில், 2022–2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்களால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> **"பழங்குடியினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை மற்றும் திருமண உதவித் தொகை ஆகியன இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்குதல்".**

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், பழங்குடியினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை மற்றும் திருமண உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் இதர நல வாரியங்களில் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக இணைப்பில் கண்டுள்ளவாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

மேற்கண்ட உயர்த்தி வழங்கப்பட்ட தொகை பழங்குடியினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு சென்றடைய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**

**ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in